**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## OS.NO. 83/2011 PW-2

| | |
|---|---|
| Name | சந்தியா |
| Husband/Father Name | சிவக்குமார் |
| Village /Area | ஆரணி |
| Taluk | |
| Occupation | துணை வட்டாட்சியர், ஆற்காடு |
| Age | 36 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 12.08.2024 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

இந்த வழக்கு சொத்துக்கு சம்மந்தப்பட்ட FMB மற்றும் அ பதிவேடு எடுத்து வந்துள்ளீர்களா என்றால் ஆமாம். நான் கோப்புகளில் உள்ள FMB யின் அசல் நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் **Ex.X1** ஆகும். அதே போல் அலுவலக கோப்புகளில் உள்ள அ பதிவேடு அசல் நகலை தாக்கல் செய்கிறேன் அந்த ஆவணம் **Ex.X2** ஆகும். வழக்கு வாதுரையில் இணைக்கப்பட்டுள்ள வழக்கு சொத்தின் வரைபடமும் உங்கள் வழக்கு கோப்பில் உள்ள சொத்தின் வரைபடமும் ஒரே மாதிரியாக உள்ளதா என்றால் ஆமாம். உங்கள் வரைபடத்தின் படி பொது சந்து 1608/61 சர்வே எண்ணில் அமைந்துள்ளது. அதன் தற்போதைய அகலம் 75 ச.மீ ஆகும், அதன் அகலம் 3 1/4 அடி ஆகும், நீளம் தெரியாது. பொது சந்து தற்போது பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளதா என்றால் இல்லை.

**<u>1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

X1 ல் மஞ்சள் நிறத்தில் அடையாள படுத்தியுள்ள பகுதிக்கு தெற்கே உள்ளது கிழக்கு மேற்காக அமைந்துள்ள தெரு என்று சொன்னால் ஆமாம். தெருவிற்கு வடக்கு பக்கம் வீடுகள் அமைந்துள்ளது அதற்கு பின்பக்கம் சந்து எதுவும் இல்லை என்று சொன்னால் ஆமாம். வரைபடத்தில் கிழக்கு மேற்காக அமைந்துள்ளது பெருமாள் கோயில் தெரு என்றல் ஆமாம். பெருமாள் கோயில் தெருவிற்கு வடக்கு பக்கத்தில் தான் வாதி மற்றும் பிரதிவாதி வீடு அமைந்துள்ளது என்றால் ஆமாம். ராணி வீட்டிற்கு கிழக்கு பக்கத்தில் மட்டும் தான் சந்து அமைந்துள்ளது என்றால் ஆமாம். ராணி வீட்டிற்கு பின்னால் வடக்கு பக்கத்தில் ராஜேந்திரன், சிவகாமி, ராணி மற்றும் சந்திராயன் வீடுகள் உள்ளது அதற்கு வடக்கு பக்கத்தில் எந்த சந்தும் உங்கள் FMB கோப்புகளில் இல்லை என்று சொன்னால் ஆமாம். வழக்கில் ராஜேந்திரன், சிவகாமி, ராணி மற்றும் சந்திராயன் வீட்டிற்கு வடக்கு பக்கத்தில் சந்து காணப்பிக்கபட்டிருந்தால் அது தவறு என்று சொன்னால் ஆமாம். வழக்கில் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்திற்கும் உங்கள் ஆவணத்திற்கும் முரண்பாடு காணப்படுகிறது என்றால் ஆமாம்.

முதல் விசாரணையில் வாதுரையுடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்திற்கும் உங்கள் வரைபடத்திற்கும் எந்த முரண்பாடுகளும் இல்லை என்று பதிவு செய்துள்ளீர்கள் அது தவறு என்றால் பாதி ஒத்துப்போகிறது பாதி ஒத்துப்போகவில்லை. உங்கள் அலுவலகத்தில் வாதி தன் சொத்தின் வடக்கு பக்கம் சந்து இருப்பதாகவும் இது சம்மந்தமாக திருத்தம் செய்ய கோரி மனு எதுவும் கொடுத்திருந்தாரா என்றால் இல்லை. வழக்கறிஞர் ஆணையர் களத்திற்கு சென்று வருவாய் துறை ஆவணங்களை வைத்து தன் அறிக்கையில் வாதியின் வடக்கு பக்கம் சந்து இல்லை என்று

சொல்லப்பட்டுள்ளது பற்றி கேட்டால் ஆமாம். வாதி சொல்வது போல் அவர் சொத்துக்கு வடக்கு பக்கம் முட்டு சந்து இருந்திருந்தால் வருவாய் துறை ஆவணங்களில் அது பிரதிபலித்திருக்கும் என்றால் ஆமாம்.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- **********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.